உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 113.
வலைதளம் : www.ulakaththamizh.org / மின்னஞ்சல் : iits@tn.nic.in
தொலைபேசி : 22542992, 22542781 நகலி : 22541436

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.,பிஎச்.டி
இயக்குநர்

நாள்: 09.01.2021

# ஊடகச் செய்தி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வழி திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல்

சங்க இலக்கியத்தில் தனிச்சிறப்புடன் யாப்பில் உலக மக்களுக்கு பொதுவாக பல புதுமையானக் கருத்துக்களோடு சமூக முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பொருட்பெருக்கமும் சொற்சுருக்கத்துடன் எழுதப்பட்ட ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள். இது அற நூல், மெய்யியல் நூல், இலக்கிய நூல், அரசியல் நூல், இன்ப நூல், வாழ்வியல் நூல் என்ற பல பரிமாணங்களை உடையது. இதனை அனைத்துத் தரப்பு மக்களும் உணர்வதற்காக மாண்புமிகு மேனாள் முதமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டது திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடமாகும்.

இக்காட்சிக்கூடத்தில் திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு ஓவியம் வீதம் மொத்தம் 133 ஓவியங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறள் தொடர்பான ஓலைச் சுவடிகள், அரிய நூல்கள், சிலைகள், நிழற்படங்கள் மற்றும் சென்ற ஆண்டு ஓவியப்போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுப்பெற்ற 15 ஓவியங்கள் ஆகியன சேகரித்து காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

2019–20ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது

> **“உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வழி ஆண்டுதோறும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டில் திருக்குறள் நெறிப்படி சிறந்த ஓவியம் படைப்பவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்”**

மேற்சுட்டிய அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாக சென்ற ஆண்டு (2019–20) நடத்தப்பட்ட ஓவியப் போட்டிப் போன்று இந்த ஆண்டும் (2020–21) உலகத் தமிழாராய்ச்சி நிறுவன திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வாயிலாக திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது. இதற்காக திருக்குறள் மற்றும் திருக்குறள் கூறும் பொருள் தொடர்பான ஓவியங்களை தமிழ்நாடு முழுவதிலுமுள்ள படைப்பாளிகளிடமிருந்து பெற்று நடுவர் குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு சிறந்த 15 படைப்புகளுக்கு இதற்கென

நடத்தப்பெறவுள்ள விழாவில் பரிசுகள் வழங்கப்படவுள்ளது. படைப்பொன்றுக்கு ரூ. 40,000/– பரிசுத் தொகையாக வழங்கப்பெறும். போட்டிக்கான விதிமுறைகள் பின்வருமாறு

**<u>விதிமுறைகள்</u>**

- ஓவியங்கள் திருக்குறள் மற்றும் திருக்குறள் கூறும் பொருள் தொடர்பில் இருத்தல் வேண்டும்.
- ஓவியங்கள் ஏதேனும் ஒரு திருக்குறள் அல்லது ஒரு அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படுதல் வேண்டும்.
- படைப்பு எந்த குறள்/அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தனித்தாளில் படைப்பாளரின் பெயர், முகவரி, தொடர்பு எண் மற்றும் ஆதார் அடையாள அட்டை (நகல்)யுடன் அனுப்பப்படல் வேண்டும்.
- ஒரு படைப்பாளர் ஒரு ஓவியத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும், ஒன்றுக்கு மேற்பட்ட ஓவியங்களை அனுப்பப்பட்டால் தகுதி நீக்கம் செய்யப்படும்.
- ஓவியங்கள் சொந்தப் படைப்புகளாக இருத்தல் வேண்டும்.
- ஓவியங்கள் அச்சு ஊடகங்கள், இணைய தளங்கள் மற்றும் வேறெந்த போட்டிகளில் பங்குபெற்றதாக இருத்தல் கூடாது.
- ஓவியங்கள் 3 அடி x 2 அடி அளவுள்ளதாக இருத்தல் வேண்டும்.
- தரமான ஓவிய கித்தான் துணியில் (Canvas Cloth) வரையப்பட வேண்டும்.
- ஓவியம் தரமான அக்ராலிக் (Acrylic Paint) வண்ணக் கலவையில் தீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சென்ற ஆண்டு நிறுவனத்தால் நடத்தப்பெற்ற ஓவியப் போட்டியில் பங்குப்பெற்று வெற்றி பெற்றவர்கள், இப்போது நடத்தப்பெறும் போட்டியில் பங்கேற்கக் கூடாது.
- நடுவர்களின் முடிவே இறுதியானது.
- போட்டியில் பங்கேற்கவுள்ள ஓவியங்கள் நிறுவனத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் 03.02.2021 – புதன்கிழமை மாலை 5.30 மணி. **முகவரி:** இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை–600 113.
- தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கான பரிசுகள் 24.02.2021 – புதன்கிழமை அன்று வழங்கப்படும்.
- வெற்றி பெறுபவர்கள் விழாவிற்கு வருகைதர பயணப்படி, நாட்படி போன்றவை வழங்கப்படமாட்டாது.

மேலும் விவரங்களுக்கு இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113, தொலைபேசி – 044–22542992, வலைத்தளம் – www.ulakaththamizh.in-இல் தொடர்புக் கொள்ளலாம்.

இயக்குநர் (மு.கூ.பொ.)